(See Rule 42 of CRPC)

DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
**CC. NO.666/2019**
**Depostitions of PW- 1 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. பாலையாபிள்ளை | Caste | |
| Father name | பாலையாபிள்ளை | Calling | - |
| Village | மம்சாபுரம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of August-2024

Signature of Witness.

19.08.2024

எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

முதல் விசாரணை–

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வயது முதிர்வின் காரணமாக வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறேன். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் என் வீட்டிற்கு முன்பு எனது மருமகன் சம்பளம் கொடுக்காதது சம்மந்தமாக எனது மகளிடம் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். அப்போது ஏன் சத்தம் போடுகிறீர்கள் என்று நான் கேட்டதற்கு முத்து எனது வலது கையை பிடித்து ஒடித்துவிட்டார்.

2. மற்ற மூன்று நபர்களான முத்துகிருஷ்ணன், பால்ராஜ், மற்றும் பால்ராஜின் மனைவில் ஆகியோர்கள்எனது தலை முடியைப் பிடித்து இழுத்தார்கள். நான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். ( **புகார் வாக்குமூலம் அ.சா. ஆ. 1 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.